பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 04 செவ்வாய்க்கிழமை 17-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 118

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ/1768)

## யுத்தநிறுத்தம் - தாக்குதல் தவிர்ப்பில்

# முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படை - புலிகள் மோதல்

## 7படையினர்காயம்; 2புலிகள் உயிரிழப்பு டோறாப்படகும் பலத்த சேதம்

வவுனியா நிருபர் ரி. விவேகராசா)

முல்லைத்தீவுக் கடற் பிராந்தியத்தில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையில் நேற்று அதிகாலை 1.45மணியளவில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தின் போது கடற்படையினருக்குச் சொந்தமான டோறாப்படகு சேதமடைந்ததுடன், 7கடற்படையினரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த படையினர் பலாலி முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இரண்டுமணிநேரம் இடம்பெற்ற இம் மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு கடற்புலிகள் கொல்லப்பட்டதாகவும் கடற்படையினர் யுத்த நிறுத்தத்தை மீறி வலிந்து தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த காலத்தில் மூன்றாவது தடவையாக நேற்று அதிகாலை கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையில் இம்மோதல் வெடித்துள்ளது.

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் கடற்புலிகளின் அணி மீது கடற்படையினர் இத்தாக்குதல்களை தொடுத்திருந்தனர்.

எரிபொருள்களை விடுதலை புலிகள் எடுத்துச் சென்ற வேளையிலேயே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக கடற்படையினரின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தின் போது கடற்படையினருக்கு சொந்தமான டோறாப்படகு சேதமடைந்ததாகவும், அப்படகு பின்னர் காங்கேசன் துறையில் இருந்தும் திருமலையில் இருந்தும் வந்த தாக்குதல் படகுகள் இழுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைஇத் தாக்குதல்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினரால் பரல்கள் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலின் போது கடற்படையினரால் பிளாஸ்ரிக் பரல்கள் கைப்பற்றப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தின தெரிவித்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பிளாஸ்ரிக்பரல்களில் என்ன இருக்கிறதென்று அடையாளம் காண்பதற்கு அவை இர (8ம் பக்கம் பார்க்க)

### தமிழ் மக்களின் சம உரிமைக்கு

## அரசு உத்தரவாதமளித்தால் தாயக சுயாட்சிக்கு புலிகள் தயார்!

### சண்டே ரைம்ஸ்சுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

(கொழும்பு)

தமிழ் மக்களின் சமஉரிமைக்கு அரசு உத்தரவாதம் அளித்தால் தாயக சுயாட்சி தீர்வுக்கு விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்;

லண்டனில் இருந்து வெளியாகும் சண்டேரைம்ஸ் பத்திரிகையின் நிருபர் மாரிகொல்வினுக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமானமல்லாவியில் வைத்து வழங்கியபிரத்தியேக பேட்டி ஒன்றிலேயே தமிழ்செல்வன்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்செல்வனுடனான சந்திப்பின் பின் அவர் தெரிவித்திருப்பதாவது.

கொழும்பில் உள்ளபௌத்த பிக்குகளினால் முடிவுசெய்யப்படும் வாழ்க்கை முறையை ஏற்க நாம் தயாராகஇல்லை.

60 ஆயிரம் உயிர்களைப் பலிகொண்ட 18 வருட மோதல்களின் பின் வட இலங்கையில் தனிநாட்டுக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மகன் வீசிய கிரனேற் தந்தையை பலிஎடுத்தது!

### புதுவருடத்தில் சோக சம்பவம்

வீட்டில் இடம்பெற்ற புதுவருடக் கொண்டாட்ட விருந்துபசாரத்தின் போது இரராணுவத்தில் கடமை புரியும் தனது மகன் வீசிய கிரனேற் வெடித்ததில் தந்தை துடிதுடித்து ஸ்தலத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை புதுவருட தினத்தன்று கந்தளாயில் இடம் பெற்றது:

புதுவருடப் பண்டிகையை உறவினர்களோடு சந்தோசமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தவேளை இராணுவத்தில் கடமைபுரியும் மகன் சந்தோச மிகுதியால் கையிலிருந்த கிரனேற்றை (8ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் இருவர் உயிரிழப்பு

[வவுனியா]

முல்லைத் தீவு கடற்பிராந்தியத்தில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு கடற்புலிகள் உயிரிழந்துள்ளதாகப் புலிகளின் குரல் நேற்றிரவு அறிவித்துள்ளது.

கடற்புலி லெப்டினட் தமிழ் மறவன் [சிவலிங்கம் ரஜேந்திரன் கிளிநொச்சி], 2ம் லெப டினட் கடற்புலி கவிமகள [ரூபநாயகி செல்வபதி அம்பாறை] ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். [ப]

## ஐ.தே.கட்சியின் விருந்தில் கூட்டணி எம்.பிக்கள்

[கொழும்பு]

பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பிற்கு எம்பிக்களைத் தத்தம் பக்கம் ஈர்ப்பதற்காக அரசாங்கக் கட்சியும் எதிர்கட்சியும் எம்பிக்களுக்கு இராப் போசன விருந்துபசாரம் வைத்து மகிழ்வித்தமை தெரிந்ததே;

இதில் எதிர்க் கட்சியான ஐக்கியதேசியக் கட்சி வைத்த விருந்தில் தமிழர்விடுதலைக் கூட்டணி எம்பிக்களான வீ ஆனந்தசங்கரி. மாவைசேனாதிராசா. எஸ் சிவமகராசா யாழ் மேயர் என் ரவிராஜ் ஆகியோரும் கலந்து கொண்டு பது ஆதரவைத் தெரிவித்ததாகத் தெரியவருகிறது. [ம]

### மன்னார்சம்பவத்தைகண்டித்து

## வன்னிப் பகுதியில் பெண்கள் பேரணி

(வவுனியா)

மன்னார் உப்புக்குளத்தில் இடம் பெற்ற இரு இளம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் மகளிர் அமைப்புகளினால் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி வட்டக்கச்சி, பூநகரி முழங்காவில், விஸ்வமடு ஆகிய இடங்களில் இடம் பெற்றது பெருமளவு பெண்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பாலியல் வன்முறைக்கெதிரான கோஷங்கள் எழுப்பி பதாதைகளைத் தாங்கிய வண்ணம் ஊர்வலத்தினர் சென்றனர்

ஊர்வலத்தின் இறுதியில் ஐ. நா செயலர் கே பி அனானுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டது (ம)

## தாக்குதல் தவிர்ப்பு மட்டக்களப்பில் மீறல்

### புலிகள் குற்றச்சாட்டு

(வவுனியா)

புதுவருடத்தை முன்னிட்டு அரசினால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தத்தை மட்டக்களப்பில் இராணுவத்தினர் மீறியுள்ளார்கள்என விடுதலைப்புலிகளின் மட்டுஅம்பாறைமாவட்ட அரசியல்பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்தசனிக்கிழமை பி.ப1. 30மணியளவில் மட்டக்களப்பு மாவடி வேம்புஎன்ற இடத்தில் படையினர் மேற்கொண்டதாக்குதலில் விடுதலைப்புலிகள் உறுப்பினர் இருவர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை அன்றைய

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நட்பைஇழந்ததனயன் பெற்றதாயைகொன்றான்

[கொழும்பு]

நண்பர்களின் பிரிவைத் தாங்க முடியாது தற்கொலை செய்ய முயற்சித்த சிறுவனைக் காப்பாற்றி, புத்திமதி கூறிய தாயாரை, அச்சிறுவனே அடித்துக் கொலை செய்த துயரச் சம்பவம் புதுவருடப் பிறப்பன்று யப்பானில் இடம் பெற்றுள்ளது.

யப்பானின் அமாகாஷியா என்ற இடத்தில் நடைபெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

ஆறாந்தரக் கல்வியை தொடர்வதற்கு பிரஸ்தாப சிறுவனை புதியபாடசாலைக்கு தாயார் மாற்றினார். புதியபாடசாலையில கல்வியைத் தொடர்ந்தசிறுவனுக்கு தன்னுடன் முன்னர் படித்த பாடசாலை நண்பர்களின் நட்புகிடைக்காத துக்கத்தினால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டான் அதனைத்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# செய்தித் துளிகள்

## அமைச்சர் ஸ்ரீபால தெரிவிப்பு

(கொழும்பு)

தொலை தொடர்பு கோபுரங்கள் சீராக்கல் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டிலுள்ள 2000 தொலை தொடர்பு கோபுரங்களில் ஒரு சில மட்டுமே உரிய தரங்களுடன் காணப்படுவதாகவும சுற்றாடல்பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் சன சந்தடி மிக்க இடங்களுக்கு அருகிலும் பாடசாலைகளுக்கு அருகிலும் இருப்பதாகவும் பொது மக்களால் முறைப்பாடுகளும் நிபுணர்களால் சிபார்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி சீராக்கல் புதிய நடவடிக்கையின் கீழ் கம்பனிகள், தனியார் தம் விருப்பப்படி தமக்கேற்ற விதத்தில் கோபுரங்கள் அமைப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் சீராக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க-2)

## விளக்கினால் எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

படுத்திருந்தவேளை குப்பி விளக்குத் தட்டுப்பட்டுவீழ்ந்ததில் உடல் முழுவதும் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ குணத்தி (வயது 50) என்ற 4 பிள்ளைகளின் தாயார் யாழ் போதனாவைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

## இலவச கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை மாதாந்த நடாத்திவரும் இலவச கண் பரிசோதனை ஏழாவது முகாம், வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லை முருகன் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம கரவெட்டி வாழ் மக்களில் 300 பேர்களுக்கு மட்டும் எஸ். எம். பெர்னாண்டோவினால் கண்பரிசோதனை இடம்பெறவிருப்பதால், சம்பந்தப்பட்டகிராம அலுவலர்களிடம் பதிவுகளை மேற் கொளளுமாறு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய்க்கான ஆய்வுப் பரிசோதனையும் இரத்தஅழுத்த சோதனையும் அன்று இடம்பெறும். [உ]

## மோட்டார் சைக்கிள் விபத்து

[யாழ்ப்பாணம]

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணம் செய்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இ இராகுலன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-10)

## விபத்தில் காயம்

(மந்திகை)

துவிச்சக்கரவண்டியில் வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் குறுக்கே நாய் சென்றதில் ஏற்பட்ட விபத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துன்னாலை தாமரைக்குளம் பகுதியில் ஏற்பட்ட இச் சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த சிவஞானம் கௌரி (வயது 24) என்பரே காயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-23)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிராமமட்ட அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு ஒன்று இம் மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை, யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலை புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் வாராந்தநிகழ்வில் 60இற்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்திச சங்க உறுப்பினர்கள பங்கு பற்றுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

48 மணித்தியாலங்கள் கொண்ட இக்கற்கை நெறியில் விரிவுரையாளர்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (க-6)

## நிர்வாக சபை தெரிவு

(அரியாலை)

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக ச. செல்வரத்தினம், செயலாளராக இ. மகேந்திரன், பொருளாளராக இ. தயாபரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-106)

## புத்தாண்டுதினத்தில் விபத்துக்களில் 915 பேர் காயம்

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன்தொளாயிரத்து பதினைந்து பேர் காயமடைந்துள்ளனர்.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமையே பெருமளவான விபத்துக்களிற்கு காரணம் என தெரிய வந்துள்ளது. [செ-3]

## பொதுக் கூட்டம்

(அரியாலை)

யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி பழையமாணவ சங்கவருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. (உ-106)

## மகளிர் பஜனை

[யாழ்ப்பாணம்]

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு விசேட மகளிர் பஜனை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளதால் இந்நிகழ்வில் ஆன்மீக நாட்டமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளும்படி நிலையத் தலைவர் அறிவித்துள்ளார். [உ-104]

# தீவக கல்வி வலயத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றவர்களிடம் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கல்வியியல் கல்லூரிகளில் டிப்புளோமா பட்டம் முடித்து 1.2 2001 முதல் ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் தமது நியமனக் கடிதங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று உரிய பாடசாலைகளில் கடமையேற்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

ஆசிரியர் நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு;

பூ வசந்தா பெரியதோட்டம், கரவெட்டி

கு ராஜினி அணிஞ்சாம்புலம் கரணவாய், வடக்கு

த. பிரதீபன் முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கு

க.முகுந்தன் 38 பி, சிமெற்றி றோட் குடாப்பாடு நீர்கொழும்பு

க.குணசுந்தர் குரும்பைகட்டி புலோலி தெற்கு

ம.கௌரி சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை

இ. பிரபலதா கொம்மந்தறை, வல்வெட்டித்துறை

சி. ஸ்ரீதரன் எழுதுமட்டுவாள் தெற்கு

வி.மங்களவடிவு 14, அரசடிப்பிள்ளையார் வீதி, மட்டக்களப்பு

மா.சுதாஜினி 'அன்னை இல்லம்' கரவெட்டி மேற்கு

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பட்டதாரி 'பயிலுநர் ஆசிரியர் நியமனம் பெற்ற

நடராசா பஞ்சாட்சரம் 'லிங்கவாசா' வரணி வடக்கு

குசலவன் சுவேந்திரன் மடத்துப் பிள்ளையார் கோவிலடி, தொல்புரம் கிழக்கு

பாலகிருஷ்ணன் உதயராஜன் 'சிவமதி' துன்னாலை கிழக்கு

தம்பிராசா ஜெயபாபு மே/பா வேலுப்பிள்ளை, முல்லையன் தோட்டம் புலோலி தெற்கு

எஸ். சுபலிங்கம் 'திருமதி வாசா' புலோலி கிழக்கு

பொன்னுத்துரை செல்வக்குமார் மே/பா எம். இரத்தினகுமார் துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு

சிவப்பிரகாசம் உதயகுமார் 93/1 சம்பியன் லேன், கொக்குவில்

நாகராசா அம்பிகைபாகன் அரசொல்லை அளவெட்டி வடக்கு

ஆகியோரைக் தீவக கல்வி வலயத்தில் நியமனக் கடிதத்தைப் பெற்று உரிய பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்குமாறு தீவகவலயக் கல்விப் பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# இராசி பலன்

17-4-2001

(சித்திரை 4. செவ்வாய்)

நவமி பி ப 1.54 வரை

திருவோணம் பி.ப5.20வரை

இராகுகாலம் 3.04- 4 34

நல்ல நேரம் 10:34- 12:04

சித்தம்.

**மேடம்**
தொழில் மேன்மை, அதிகாரம், முயற்சி கைகூடும், நல்ல செய்தி.

**இடபம்**
வயிற்றுக் கோளாறு, கட்டுப்பாடு, அச்சமான நிலை, பிரயாணம்.

**மிதுனம்**
வீண் தொல்லை, வியாதி, காரிய தடங்கல், எதிர்பாராத பிரச்சினை.

**கடகம்**
பிரயாணம், போசனசுகம், சுவாரஸ்யம், தனவரவு.

**சிங்கம்**
நோய்குணமடைதல், பகைவர் விலகுவர், முயற்சி விருத்தி, திடீர் பயணம்.

**கன்னி**
தாழ்வு நிலை, வியாபார மேன்மை, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம்.

**துலாம்**
தடுமாற்றம், தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
அந்நியர் சந்திப்பு, சகோதரர் உதவி, தனவரவு, வாக்கு மேன்மை.

**தனுசு**
தனவிரயம், கௌரவக் குறைவு, வாக்குக் கலகம், முயற்சி தாமதம்.

**மகரம்**
கற்பனை மிகுதி, நண்பர்கள்உதவி, ஜனவசியம், சயன சுகம்.

**கும்பம்**
காரிய அலைச்சல், பணவிரயம், சயன சுகக் குறைவு, மனக்கிலேசம்.

**மீனம்**
தனலாபம், மனமகிழ்ச்சி, கீர்த்தி, காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மாடியிலிருந்து வீழ்ந்து சிறுவன் காயம்

(மந்திகை)

வீட்டு மாடியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் தவறி வீழ்ந்ததில் காயமடைந்ததையடுத்து பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

பருத்தித்துறை தும்பளையைச்சேர்ந்தநியூசியான் ஜெரிஸ் (வயது 09 என்றசிறுவனே காயமடைந்தவராவார். (க-23)


## அவசர கலந்துரையாடல்

சகல அனுமதிப் பத்திரம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் அனைவருக்கும் 18-04-2001 புதன் கிழமை பகல் 2.00 மணிக்கு திக்கம் வடிசாலையில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுமுகாமையாளர்
திக்கம் வடிசாலை

[கி-1797]

## உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் தேவை, மதிக்கப்பட்ட விலையுடன் நேரில் அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

விளம்பர இல. 002

வலம்புரி

இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

## அவசர கலந்துரையாடல்

கள் கொள்வனவு விடயமாக சகல ப. தெ. வ. அ. கூ. சங்க தலைவர் / பொதுமுகாமையாளர் ஆகியோரை 18-04-2001 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு திக்கம் வடிசாலைக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொதுமுகாமையாளர்
திக்கம் வடிசாலை

[கி-1798]

## நினைவு கூரல்

அமரர் கலாநிதி

**ஆ. தியாகராசா M. A., M. Lit.**

(முன்னைநாள் தேசியப் பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்.)

'' தனக்கென வாழாது மக்களுக்கென வாழ்ந்து மரணித்த மாமனிதனின் 85-வது பிறந்த தினம் இன்றாகும்.''

'தவபவனம்'
பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

நினைவு கூருபவர்
காரை சி. சிவபாதம்
வங்கியாளர்.

(கி-1794)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு கூரைத் தகரங்கள் வழங்குவதில் பாகுபாடா?

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து புன்னாலைக் கட்டுவன் பகுதியில் தங்கியிருக்கும்சில குடும்பங்களுக்கு இலவச கூரைத் தகரங்கள் வழங்கப்படவில்லை என தெரிய வருகின்றது.

கூரைத் தகரங்கள் வழங்கப்படாதவர்கள் உரிய அதிகாரிகளிடம் தமக்கும் தகரங்கள் தரும்படி கேட்கப்பட்டபோதிலும் தங்கியிருக்கும் காணி உறுதி காட்டப்பட்டால் தான் கூரைத் தகரங்கள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டதாம்.

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வாழ்கின்றதாம் தற்போது தங்கியிருக்கும் இடங்களில் எவ்வாறு காணி உறுதியைக் காட்ட முடியும் என இடம்பெயர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கேள்விஎழுப்பி வருகின்றனர்.

]உ-77]

# இராணுவவலயமாகமாறும் விமான நிலையம்?

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையம் 88 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது!

இந்தப் புனரமைப்பின் பின்னர் இவ்விமான நிலையம் சிவில் இராணுவ வலயமாக மேம்படுத்தப்படவுள்ளது என்று சிவில் விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானம் பழுது பார்க்கும் பட்டறை, விமானஓடுபாதை, விமானப் படையினருக்கான வதிவிடக்கட்டடங்கள், பொது மக்களுக்கான கார் தரிப்பிடம் போன்றவையும் அமைக்கப் படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-07)

# இளைஞர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

வாள்வெட்டிற்கு இலக்காகிய நபர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புலோலிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கற்கோவளத்தைச் சேர்ந்த பா.இராமகிருஸ்ணன் என்பவரே கை, தலைப் பகுதியில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

சொந்தப் பகைமையே இச்சம்பவத்திற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-23)

யாழ்.போதனா வைத்தியசாலை

# வெளிநோயாளர் பிரிவில் புதிய கொட்டகை

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் நலன்கருதி புதிய கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

30 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட இக் கொட்டகை வைத்தியசாலையின் 49 ஆயிரம் ரூபா நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநோயாளர் பிரிவில் காணப்பட்ட இடப்பற்றாக் குறைகாரணமாக நோயாளர் மழை, வெய்யில் என்பவற்றுக்கு மரத்தின் கீழும், மதில் ஓரங்களிலும் ஒதுங்கும் நிலைமையைத் தவிர்க்கும் வகையிலேயே வைத்தியசாலைப் பணிப்பாளரின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-10-104)

பிரிட்டன்புலிகளை தடைசெய்வதற்கு

# இந்தியாவின் அக்கறையை இல.ஒருபோதும்மறக்காது

(கொழும்பு)

பயங்கரவாத தடைப்பட்டியலின்படி விடுதலைப் புலிகளை, பிரிட்டன் தடைசெய்வதற்கு இந்தியா காட்டிய அக்கறையை இலங்கை ஒருபோதும் மறக்காது என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான கட்டத்திற்கு இலங்கை அரசு வந்துள்ளமை எதிர்பாராதசடுதியான திருப்பம் அல்லகடந்தஇரண்டுஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்பாடே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சென்னையில் வெளியாகும் ஆங்கிலச் சஞ்சிகையான புறொன்ட்லைன்' ஆசிரியர் கொழும்பிற்கு வருகை தந்த பொழுது, அவருக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரித்துள்ளார்.

[செ]

## சுயதொழில் உதவித் திட்ட

# கடன்களை மீளப்பெற முடியாத நிலையில் தொண்டு நிறுவனங்கள்

[தென்மராட்சி]

தென்மராட்சிப் பிரதேசத்தில் அரசுசார்பற்ற நிறுவனங்களினால் சுயதொழில் உதவித்திட்டத்துக்கு எனகடன் அடிப்படையில் வழங்கப்பட்ட நிதியை மீளவும் பெற முடியாத நிலையிருப்பதாக அந்நிறுவனங்களின்பிரதி நிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக பிரதான உழைக்கும் நபர்களை இழந்த குடும்பங்களின் பொருளாதார மேம்பாடு கருதி வழங்கப்பட்ட இத்தகைய கடன் நிதியைக் கொண்டு பெரும்பாலான பயனாளிகள், ஆடுகள் வளர்த்தல், சிறுவியாபாரம், கோழி வளர்ப்புத்திட்டம், உணவுப் பதார்த்தங்கள் தயாரித்தலும், விற்பனை செய்தலும் போன்ற திட்டங்களை ஆரம்பித்திருந்தனர்.

ஆயினும் அவற்றின் மூலம் உரிய பொருளாதாரப் பயன்பாடுகளை பெறும் முன்னரே தென்மராட்சியில யுத்த நடவடிக்கைகள் ஆரம்பித்தமை காரணமாக, நிதியை வழங்கிய நிறுவனங்களும் அதனை வசூலிக்கும் விடயத்தில் பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருப்பதாக கூறப்படுகிறது

(உ-77)

## புதுவருடக் கவிதைகள்

### சித்திரையே பிறந்திரு

சமாதான மழையது
உன்னால் பொழிந்திட
சண்டைக் கனலது
உன்னோடழிந்திட
சமரசமாய் செந்தமிழைச்
சுவைத்துக் களித்திட
சற்றே துணிவுடன்
சித்திரையே பிறந்திடு!

நீர்வைக் கலைவரன்

### இனிய புத்தாண்டே

புத்தாண்டு வரும்
புது வாழ்வு தரும்
ஆண்டுக் ஒருமுறை
ஆறுதல் அடைவோம்
இரண்டாயிரத்தி ஒன்றில்
தென்புடன் இருக்கிறோம்
தேசம் விடியுமென்று
இனிய புத்தாண்டே
இம் முறையாவது
யுத்தமும் ரத்தமும்
மண்ணில் மறைந்து
சாந்தி சமாதானம்
சமரசம் ஏற்பட
வழிவகை செய்வாயா?

த. மதியழகன்
நெந்துதீவு-03

### வரவேற்போம்

ஆண்டுக்கு,
இளமையும் உண்டு,
முதுமையும் உண்டு;
ஒரு ஆண்டு
முதுமைபெற்று முடிகின்ற போது
மறு ஆண்டு பிறக்கின்றது
ஒவ்வொரு ஆண்டும்
நமது ஆயுளின் ஒருபகுதியை
திருடிக்கொண்டு செல்கிறது
முதுமைக் கோலத்தை
வரைய மறக்காத கால ஓவியன்
சிந்தனைகளை
சீண்டிப் பார்க்கும்
சென்ற ஆண்டுகளின்
காலடிச்சுவடுகள்.
சுவடுகள் பல
பயணம் ஒன்றுதான்
இதயத் தோட்டத்தில்
எத்தனை நினைவுப் பூக்கள்
கொஞ்சம் தட்டி விடுங்கள்
முகாரி தூசிகள் கொட்டும்
மோகனப் பூக்கள்
முகங்களைக் கூட்டும்
பிரிகின்ற ஆண்டுக்கு விடை தருவோம்
வருகின்ற ஆண்டை வரவேற் போம்!

டாக்டர் கே. பரமானந்தம்

## இசை வகுப்பு

[இணுவில்]

உடுவில் இநது இளைஞர் மன்றத்தினரால், மிருதங்கம், நடனம், பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [உ-49]

## விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் மாவட்ட ஆணையாளர்களுக்கானவிசேடகூட்டம் நாளை புதன்கிழமை பிப 3 00 மணிக்கு வடமாகாண ஆணையாளர் (மேலதிக அரசாங்க அதிபர்) து வைத்திலிங்கம் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [உ-104)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது:

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 188551 ஏ | 188551 பி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 186014 ஏ | 186014 பி |
| 188014 சி | 186014 டி |
| 186014 ஈ | 186014 எப் |
| 186014 ஜி | 186108 ஏ |
| 186167 ஏ | 186233 ஏ |
| 186567 ஏ | 186267 ஏ |
| 186836 ஏ | 188836 பி |
| 188836 சி | 188868 ஏ |
| 188914 ஏ | 188914 பி |
| 188914 சி | 188954 ஏ |
| 188966 ஏ | 189010 ஏ |
| 189010 பி | 189010 சி |
| 189121 ஏ | 189121 பி |
| 189121 சி | |
| 186307 ஏ | 186307 பி |
| 188096 ஏ | 188841 ஏ |
| 188870 ஏ | 188870 பி |
| 188870 சி | 188875 ஏ |
| 188875 பி | 188876 ஏ |
| 188876 பி | 188876 சி |
| 188883 ஏ | 188895 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 167954 ஏ | 185386 ஏ |
| 185386 பி | 185455 ஏ |
| 185455 பி | 185455 சி |
| 185455 டி | 185788 ஏ |
| 188378 ஏ | 188413 ஏ |
| 188421 ஏ | 188421 பி |
| 188424 ஏ | 188493 ஏ |
| 188534 ஏ | 188534 பி |
| 188553 ஏ | 189873 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 172401 ஏ | 172401 பி |
| 177821 ஏ | 177821 பி |
| 177925 ஏ | 177935 ஏ |
| 177935 பி | 177935 சி |
| 182535 ஏ | 182535 பி |
| 182542 ஏ | 183660 ஏ |
| 183660 பி | 183803 சி |
| 183803 ஏ | |
| 183803 பி | 183859 ஏ |
| 183933 ஏ | 185328 ஏ |
| 185448 ஏ | 185503 ஏ |
| 188271 ஏ | 188286 ஏ |
| 188426 ஏ | 188426 பி |
| 188427 ஏ | 188509 ஏ |
| | 188509 பி |
| 189819 ஏ | 189819 பி |
| 189819 சி | [illegible] |
| 189962 ஏ | 189962 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 184586 ஏ | 184586 பி |
| 186209 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 182150 ஏ | 182150 பி |
| 184598 ஏ | 184666 ஏ |
| 184666 பி | 185840 ஏ |
| 185840 ஏ | 185840 சி |
| 185863 பி | 185863 பி |
| 185863 பி | 185922 ஏ |
| 185922 சி | 185922 டி |
| 185923 ஏ | 186038 ஏ |
| 186064 ஏ | 186064 பி |
| 186064 சி | 186064 டி |
| 186064 ஈ | 186116 ஏ |
| 186116 பி | 186116 சி |
| 186157 ஏ | 186157 பி |
| 186236 ஏ | 186253 ஏ |
| 186266 ஏ | 186266 பி |
| 186277 ஏ | 186277 பி |

மார்ச் ஏப்ரல்11 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகிறது.

### யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| 179878 ஏ | 181754 ஏ |
| 181754 பி | 184650 ஏ |
| 184650 பி | 184650 சி |
| 186114 ஏ | 186114 பி |
| 186114 சி | 186228 ஏ |
| 186230 ஏ | 186230 பி |
| 186230 சி | 186239 ஏ |
| 186239 பி | 186273 ஏ |
| 186290 ஏ | 186290 பி |
| 186290 சி | 186303 ஏ |
| 188825 ஏ | 188825 பி |
| 188830 ஏ | 188830 பி |
| 188839 ஏ | 188839 பி |
| 188839 சி | 188839 டி |
| 188857 ஏ | 188879 ஏ |
| 188938 ஏ | 188960 ஏ |
| 188960 பி | 188971 ஏ |
| 188971 பி | 188991 ஏ |
| 189016 ஏ | 189026 ஏ |
| 189026 பி | 189034 ஏ |
| 189034 பி | 189044 ஏ |
| 189151 ஏ | 189601 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 188908 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 184525 ஏ | 184525 பி |
| 184558 ஏ | 184558 பி |
| 185464 ஏ | 185464 பி |
| 185987 ஏ | 186077 ஏ |
| 186077 பி | 186121 ஏ |
| 186237 ஏ | 186237 பி |
| 188804 ஏ | 188804 பி |
| 188823 ஏ | 188823 பி |
| 188823 சி | 188846 ஏ |
| 188847 ஏ | 188892 ஏ |
| 188899 ஏ | 188929 ஏ |

## யாழ். நகரப் பகுதியில்

# பிச்சை எடுக்கும் சிறுவர்களின் தொல்லை அதிகம் எனப் புகார்

யாழ்ப்பாண நகர மத்தியில் பிச்சை எடுக்கும் சிறுவர்களின் தொகை மீண்டும் அதிகரித்துள்ளது.

பல்வேறு காரணங்களினால் தமது கல்விக்கு இடையில் முழுக்குப் போட்டு விட்டு பல்வேறு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் இவர்கள்,

வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவுச் சாலைகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க புது வருடத்திற்கான உடை விற்பனை நடவடிக்கையில் 16 வயதிற்கு குறைவான பல சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் காணக் கூடியதாய் இருந்தது. [உ-77]

## வலம்புரி கவிதைக்குடும்ப அங்கத்தவர் விபரம்

51) ப. சந்திரகுமார்
யாழ்ப்பாணம்.
52) யசித்தா இராமச்சந்திரன்
யாழ்ப்பாணம்.
53) மணியம் மோகன்ராஜ்
யாழ்ப்பாணம்.
54) சுஜித்தா இராமச் சந்திரன்
யாழ்ப்பாணம்.
55) சுந்தரம் சுந்தரலிங்கம்
பருத்தித்துறை.
56) சிவகுமாரன் சயந்தன்
வட்டுக்கோட்டை.
57) ப. ஜெகசீலன்
ஏழாலை.
58) மகுடந்தினி கதிரன்
வட்டுக்கோட்டை, சங்கரத்தை.
59) ஜெனனி வீரசிங்கம்
வட்டுக்கோட்டை, சங்கரத்தை.
60) மேரி யோகராணி
உரும்பிராய்.
61) யோசப் காமல்
யாழ்ப்பாணம்.
62) பரமசாமி தனேந்திரா
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
63) அமிர்தலிங்கம் பவித்திரன்
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
64. இராஜா ஜெயக்குமார்
குப்பிளான, ஏழாலை.
65) நாகமணி மகேந்திரலிங்கம்
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
66) அருமைத்துரை யசீகரன்
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
67) லலிதா அருமைநாயகம்
தாவடி தெற்கு, கொக்குவில்.
68) ஜோ ணி மதுரநாயகம்
அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.
69) இராசையா ஸ்ரீகந்தராசா
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.
70) மகிழினி குணசிங்கம்
கச்சாய் வீதி, கொடிகாமம்.
71) பொன்னுத்துரை அன்பரசன்
4 ஆம் வட்டாரம், நயினாதீவு.
72) சிறிரஞ்சினி சண்முகராஜா
தேவாலய வீதி, சங்கானை.
73) அருளம்பலம் கஜந்தன்
ஓட்டுமடம்.
74) கந்தையா தவமணி
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
75) கே. அரசேஸ்வரம்
கலைமகள் வீதி, யாழ்ப்பாணம்.
76) ரமேஸ்குமார் கபாலினி
கந்தரோடை, சுன்னாகம்.
77) இராசையா ரமேஸ்குமார்
கந்தரோடை, சுன்னாகம்.
78) கதிரவேலு நல்லதம்பி
யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
79) ஷ ந்தன் சத்தியகீர்த்தி
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
80) செபஸ்தியாம்பிள்ளை கபிரியேல்பிள்ளை
உரும்பிராய்.
81) முருகையா சுயந்தன்
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
82) பிருந்தா முருகையா
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
83) முருகையா சுயன்
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
84) எம் சுநேசி
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
85) ஜெகதீஸ்வரன் பிரேம்குமார்
பிரம்படி லேன், கொக்குவில்.
86) பாலசிங்கம் ரஜனி
மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
87) சுப்பிரமணியம் ஆர்த்திகா
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்
88) தம்பிஐயா ஜமுனா
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
89) சிந்திகா கமலச்சந்திரன்
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
90) தயாமதி சின்னராசா
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
91) கந்தையா இந்திரகுமார்
பருத்தித்துறை.
92) லக்ஷிகா ஸ்ரீஸ்கந்தராஜா
கோப்பாய் தெற்கு, கோப்பாய்
93) வடிவேலு வடிவழகையன்
காரைநகர்.
94) இ. தர்மேந்திரா
மந்துவில் கிழக்கு கொடிகாமம்.
95) சிறிஸ்கந்தராசா சிறிக்காந்
கற்கோவளம், பருத்தித்துறை.
96) சண்முகநாதன் துளஷிகன்
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
97) நவரெத்தினம் மோகனரூபன்
நயினாதீவு.
98) சுயாத்தா தம்பையா
யாழ். பல்கலைக்கழகம், மருதனார்மடம்.
99) வல்லிபுரம் மனோரவீந்திரன்
திக்கம்.
100) அமிர்தலிங்கம் பௌநந்தி
கரவெட்டி.

(தொடரும்)

## வடிசாராய உற்பத்தியில் ஈடுபடுவோரது நிவாரணத்தை நிறுத்தக் கோரித் தீர்மானம்

(ஈச்சமோட்டை)

வடிசாராய உற்பத்தி, விற்பனையில் ஈடுபடுவோரின் நிவாரணம் மற்றும் அரச உதவிகள் யாவும் நிறுத்தப்படல் வேண்டும்.

அண்மையில் ஜே-67, 68, 69,70,71,72 இலக்க கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட சமய, சமூக பொது அமைப்புகள் ஒன்றிணைந்து குருநகர் கார்மேல் மண்டபத்தில் நடத்திய வடிசாரய ஒழிப்பு பற்றிய கலந்துரையாடலில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தவிர இவ்வாறான உற்பத்தியில் ஈடுபடுவர்களுடன் கிராம அலுவலர்கள் அலுவலகத் தொடர்புகளை நிறுத்துதல்,

உடனடியாகசட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்,

அவர்களுடைய பெயர் விபரங்களை ஒலி பெருக்கி மற்றும் துண்டுப் பிரசுரமூலம்மக்களுக்குத் தெரியப்படுத்தல்.

சமூக நடவடிக்கைகளில் இருந்து தனிமைப்படுத்தல் போன்ற தீர்மானங்களும்அன்றைய தினம் நிறைவேற்றப்பட்டதோடு இவற்றினை உடனடியாக நடை முறைப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக மேற்படி தீர்மானங்களை தெரியப்படுத்தும் வகையிலான துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகித்து வருகின்றமைகுறிப்பிடத் தக்கது. [உ-59]

## கால் முறிவு

[மந்திகை]

மரத்தின் கீழ் படுத்துறங்கியவர் மேல் தவறுதலாக லாண்ட்மாஸ்ரர் ஏறியதில் கால் முறிவடைந்த நிலையில் உடுப்பிட்டி வாசி ஒருவர், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உடுப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஈ.தர்மலிங்கம் என்பவரே கால் முறிவடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-23]

## பழுதடைந்த நிலையில் பெருந் தொகை நெல் மீட்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுவில் வடக்கு மட்டுவில் தெற்கு, சரசாலை, கல்வயல், கைதடி நுணாவில் பகுதிகளிலுள்ள பெரும்பான்மையான வீடுகளின் கூரைகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால், அவ் வீடுகளில் இருந்து பெரும் தொகையான நெல் மழை நீரில் அழுங்கி பழதடைந்த நிலையில் இருப்பதாக உரிமையாளர்களால் தெரிவிக்கப் படுகிறது.

இத்தகைய நெல்லில் பெரும் பகுதி முளை விட்ட நிலையில் இருப்பதாவும், பழுதடைந்த நெல்லில் இருந்துதுர்நாற்றம் வீசுவதாகவும் கூறப்படுகிறது. [உ-77]

## ஸ்ரீமாவின் நினைவாக புதிய மண்டபம்

[கொழும்பு]

மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் ஞாபகார்த்தமாக சர்வதேச கண்காட்சிக் கூடமும், கல்விநிலையமும் அமைக்கப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் பந்துரு சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்திற்கு அண்மையில் அமைக்கப்படவுள்ள இக் கூடத்திற்கு சீன அரசாங்கம் 45 கோடி ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது?

இத்திட்டத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்கிடையிலான நட்புறவு வளர்வதுடன் அவை மேலும்பலப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மே மாதப் பகுதியில் இப் பணி ஆரம்பமாகும் என்றும் 50 ஆயிரம் சதுரமீற்றர் பரப்பில் கட்டடம் நிறுவப்படவுள்ளதென்றும் 500 காட்சிக்கூடம் கொண்டதாகவும் கட்டடம் அமையும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [க-07]

## ஆன்மீகக் கண்காட்சி

(தென்மராட்சி)

மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மீகம் எனும் தலைப்பிலான ஆன்மீகக் கண்காட்சி ஒன்றினை வட பிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இளைஞர்பிரிவு எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்து கல்லூரியில் நடாத்தவுள்ளது.

இளைஞரின் ஆன்மீக நாட்டத்துக்கு உதவும் வகையில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-77)

## மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திசெயலணி அமைப்பு

(மந்திகை)

மருதங்கேணி உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் கிராம சேவைவையாளர் பிரிவுகள் தோறும் சமுர்த்தி செயலணி அமைக்கப்பட்டு வருகிறது.

குடத்தனை வடக்கு, பொற்பதி, அம்பன், மணல்காடு ஆகிய கிராம சேவையாளர் பிரிவிலேயே தற்போது அமைக்கப்படுகிறது

18 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது 5 கிராம அலுவலர் பிரிவு இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மாதாந்த உதவிப்பணம்

(மந்திகை]

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உதவிப்பணம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுசன மாதாந்த உதவிப்பணம்காசநோய், தொழுநோய் ஆகியவற்றுகான கொடுப்பனவுகளைப் பெறுவோர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு தத்தமது பகுதிகளிலுள்ள அஞ்சல், உபஅஞ்சல் அலுவலகங்களில் பெறறுக் கொள்ளலாம் என தபாலக அதிபர்கள் அறிவித்துள்ளனர். (உ-23)

## புடவைக் கைத்தொழில் ஊக்குவிக்கத் திட்டம்

(கல்வயல்)

கிராமியக் கைத் தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் புடவைக் கைத் தொழில் திணைக்களம், புடவைக் கைத்தொழிலை ஊக்குவித்தல் பொருட்டு 20 வீத நூல், நூலிழை மானியத்தை வழங்கவுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நூல், இறக்குமதி செய்யப்பட்ட நூல் ஆகியவற்றுக்கு இந்த மானியம் வழங்கப்படவிருக்கிறது. (உ-111)

## பதவிகளுக்கு விண்ணப்பம்

(கல்வயல்)

இலங்கைப் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற விவாதங்கள் அறிக்கையாளர் (தமிழ்) உதவி படைக்கல சேவிதர் ஆகியபதவிகளுக்கு விண்ணப்பங்களை பாராளுமன்ற செயலாளர் நாயகம் கோரியுள்ளார்.

இதற்கு விண்ணப்பிப்பதற்கானஇறுதித்தினம் மே மாதம்23 ஆம் திகதியாகும். உதவிப்படைக்கல சேவிதருக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். பாராளுமன்றவிவாதஅறிக்கையாளருக்கு இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். (உ-111)

## விடுதலைப்புலிகள் தடையை நீக்குமாறு கோருவது நியாயமானதே

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது விடுதலைப்புலிகள் தம் மீதான தடையை நீக்குமாறு நிபந்தனைவிதித்திருப்பதுநியாயமானது எனசட்டத்தரணிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள நி லயில் பேச்சு வார்த்தை சாத்தியப்படுமா? எனக் கேட்ட கேள்விக்கே சட்டத்தரணிகள் இவ்வாறுகருத்துத் தெரிவித்துள்ளனர். [செ]

## இன்று ஒரு தகவல்

# மனிதனைச் சரியாக்கினால் உலகம் சரியாகி வரும்

உலகம் கெட்டுப் போச்சு, காலம் மாறிப் போச்சு என்ற இப் பதம் தற்போது மூத்தோர்கள் வாயில் அடிக்கடி வந்து போவதுண்டு. அர்த்தமுள்ள இப்பதம் மறுபக்கத்தில் அருவருப்பையும் தருவதுண்டு. ஏனென்றால் எதற்கும் காரணம் இந்த மனிதப் பிராணியே. மில்லேனியத்தில் மனிதன் காலடி எடுத்துவைத்தாலும் கூட மனிதன் இன்னும் மாறவில்லை. இனியும் மாறப் போவதில்லை.

இன்றைய கற்றல், கற்பித்தல் செயற்பாடும் கூட அனுபவமே சிறந்த ஆசான் என்பதை அடித்துச் சொல்கிறது. இந்த நிலைமை பெற்றோர், மாணவர், ஆசிரியர்கள் உறவில் விரிசலையும் கருத்து மோதலையும் ஏற்படுத்துவதுண்டு. இதற்குக் காரணம் தவறான கற்பிதம் என்ற வஸ்து தான் எனத் தத்துவவாதிகள் குறிப்பிடுவர். இதை விளக்க ஒரு கதை.

ஒரு வகுப்பறையில் புவியியல் பாட ஆசிரியர் பாடத்தைக்கற்பித்துக் கொண்டிருந்தார். எல்லாப்பிள்ளைகளையும் அன்றைய வகுப்புக்கு முன் ஆயத்தமாக உலகப் படம், பூகோளம் உட்பட கற்றல் உபகரணங்கள் அனைத்தையும் மாணவர்களையே கொண்டு வருமாறுகூறியிருந்தார். மாணவர்களும் வகுப்பறையிலே தயாராகியிருந்தனர். பாடம் ஆரம்பித்தது. உலகப்படத்திலே சில இடங்களைக் குறிக்குமாறு ஆசிரியர் கூறினார். அந்நேரம் ஒரு மாணவன் பக்கத்திலிருந்த சக மாணவனுடன் விடய சம்பந்தமாக ஏதோ கதைத்த போது இதை அவதானித்த, சம்பவத்தை அறியாத ஆசிரியர், உலகப் படத்தை வாங்கி கோபம் தீரும் வரை பல துண்டுகளாகக் கிழித்து அவன் முன்னால் என்னவாவது செய் என்று போட்டார். எனினும் உணர்ச்சி வசப்படாது மாணவன் சேர் நான் அவற்றைப் பொருத்தி எனது வேலையைத் தொடரட்டுமா? எனக் கேட்டான். ஆசிரியர் ஏளனச் சிரிப்புடன் இனி முயன்று பார் என்றார். சற்றுநேரத்தில் மாணவன் படத்தின் துண்டுகளை ஒழுங்காகப் பொருத்தி இடங்களைக் குறித்து எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து ஆசிரியரிடம் கொடுத்தான். வியப்படைந்த ஆசிரியர் சின்னவனான நீ அச்சொட்டாக எப்படிப் பொருத்தினாய் என்று கேட்டபோது, அவனோ சேர் உலகப் படத்தின் பின்புறத்திலே ஒரு மனிதனின் படம் இருந்தது. பல துண்டங்களாகக் கிழிந்த மனிதனை ஒழுங்காகச் சரிப்படுத்தினேன். அவனை முழு மனிதனாக்கினேன். பின்னர் படத்தைத் திருப்பிப் பார்த்தேன். உலகமும் ஒன்றாகியது பின்னர் இடங்களைக் குறிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றேன் என்றான். வியந்து அதிர்ந்தார் ஆசிரியர். அர்த்தங்கள் ஆயிரம் என்பதை அறிய அவருக்கு நீண்டநேரம் எடுக்கவில்லை.

எனவே, ஏதோ ஒரு காரணத்தால் பல துண்டங்களாகப் பிரிந்து நிற்கும் மனிதர்களைஒன்றாக்குவோம் அப்போது உலகம்ஒன்றாகும். சுருங்கக்கூறின்மனிதனைச்சரி செய்தால் உலகமே சரியாக வரும் என்பது தெளிவு என்பதுடன் உலக மயமாக்கலுக்கு இது ஒரு படி.

தொகுப்பு
மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

# சிஹல உறுமயவை தடை செய்ய

# பரு. நகரசபையில் தீர்மானம்

## அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறதாம்

(யாழ்ப்பாணம்

சிஹல உறுமய கட்சியைத் தடைசெய்ய வேண்டும் என்ற தீர்மானம் பருத்தித்துறை நகரசபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்கான சூழல் உருவாகிவரும் வேளைகளில் அதற்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலான கருத்துக்களை கூறுவதிலும் அவ்வாறன செயற்பாடுகளிலும் சிஹல உறுமய ஈடுபட்டு வருவதுடன்,

இனவாதத்தைத் தூண்டும் வகையிலான கருத்துக்களை கூறி நாட்டைப் பிளவுபடுத்தி அழிவுப்பாதைக்குள் இட்டுச் சென்று போரைத் தொடருமாறு அரசைத் தூண்டி வருகிறது.

இக்காரணங்களை முன்னிட்டு அரசு அவ் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் எனப் பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் மார்க்கண்டன் சமர்ப்பித்த மனுவினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது

[ந 5]

## வீதி திருத்தம் இல்லை

[மல்லாகம்]

சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதி நீண்டகாலமாகத்திருத்தம் செய்யப்படாததையடுத்து வீதியால் செல்வோர் பெரும்கஷ்ட நிலைக்கு உள்ளாகி வருவதாகதெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதாகவும் வீதி திருத்துவது பற்றி சம்பந்தப்பட்டோரிடம் உரியமுறையில் எடுத்துக் கூறியும் கூட இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றும்பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-22]

## படக்காட்சியும் கருத்தரங்கும்

(செம்பியன்பற்று)

சுகாதார விழிப்பு சம்பந்தமான படக்காட்சிகளும் கருத்தரங்குகளும் பருத்தித்துறைப் பகுதியில் கடந்த வாரம் நடத்தப்பட்டன.

அப்பகுதி சுகாதார பரிசோதகர்களால் நடாத்தப் பட்ட படக்காட்சியை பெருமளவு மக்கள் கண்டு களித்தனர். (க-42)

## நெருந்தீவுக்கு சுற்றுலா

[தென்மராட்சி]

நெடுந்தீவுக்கு சுற்றுலா செல்வோரின் தொகை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. [உ-77]

## சடலம் எடுத்து வரப்படும்

(கொழும்பு)

இலண்டன் வேல்ஸ் நிறுவனதில் இடம் பெற்ற கார் விபத்தில் கொல்லபட்ட யாழ்ப்பாணம் வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த குலவீரசிங்கராசன் சசிதரனின் சடலத்தை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

[வ]

## ஆசிரியர் கொருப்பனவு

(மந்திகை)

சாவகச்சேரி கண்டுவில் வீதியில் அமைந்துள்ள பூவேந்தர் பாலர் பகல் பராமரிப்பு இல்ல ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு அண்மையில் அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டான் ஆலய பரிபாலான சபையின் தலைவர் வை. இராசரத்தினத்தால் வழங்கப்பட்டது. (உ-23)

## குடாநாட்டு மக்கள் புத்தாண்டு நிகழ்வுகளில் குதுகலத்துடன் ஈடுபாடு

(சங்கானை)

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி குடா நாடெங்கும் சிறப்பு நிகழ்வுகள் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகின்றன.

நாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு புத்துணர்ச்சியும், மகிழ்ச்சியும் மக்கள் மனங்களில் காணப் படுவதால் வழமை போலல்லாது இம்முறை புத்தாண்டு நிகழ்வுகளில் மக்கள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதை காணமுடிந்தது.

இதேவேளை சிங்கள-தமிழ் புதுவருடத்தை குடாநாட்டில் படையினரும் மக்களும் இணைந்து கொண்டாடி வருவதையும்.

காவலரண் பகுதிகளில் பொதுமக்கள் அனுசரித்து வரும் இறுக்கமான நடைமுறைகள் படையினரால் தளர்த்தப் பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது

(உ 124)

## விவசாயிகள் நலன் கருதி 2 குளங்கள் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

காரைநகர்பகுதியில் உள்ள இரு குளங்கள் இவ்வருடம் புனரமைக்கப்படவுள்ளன.

காரைநகர் பகுதியில் உள்ள விவசாயிகள் சிறுதானியப் பயிற்செய்கையினை மேற்கொள்வதனை அதிகரிக்கும் முகமாகவே இரு குளங்களும் புனரமைக்கப் படவுள்ளன.

நாகதம்பிரான் குளம், புளியங்குளம் ஆகிய இரு குளங்களுமே புனரமைக்கப்பட்டு அதிக நீரினைத் தேக்கக்கூடியதாக ஆழமாக்கப் படவுள்ளன

இக்குள புனரமைப்பிற்கு 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

(உ-75)

## கோப்பாயில் சிறுவர் பராமரிப்பு நிலையம்

(தென்மராட்சி)

பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கும் பொருட்டு கோப்பாயில் சாயி சிறுவர் இல்லம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இவ் இல்லத்தில் சிறுவர்களைச் சேர்க்க விரும்புவோர் ஆர். வசந்தசேனன், இல-3, ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அரியாலையில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் இல்லம், தொடர்ந்தும அங்கு இயங்கமுடியாத நிலை உள்ளதாலேயே கோப்பாயில் இவ் இல்லம் அமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

(உ-77)

## குளிர்பானம் தயாரித்தவர் மின்தாக்கி மரணம்

(மந்திகை)

புதுவருடக் கொண்டாட்டத்திற்காக குளிர்பானம் தயாரித்துக்கொண்டிருந்தவர், குளிர்சாதனப் பெட்டியில் ஏற்பட்ட மின்கசிவினால் தாக்கப்பட்டு பரிதாபகரமாக மரணமானார்.

இத்துயரச் சம்பவத்தில் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த செல்லன் சண்முகரத்தினம் (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார்

(இ-23)

## புதுவருடத்தன்று பூசை பார்க்க முடியாது களபூமிமக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

புதுவருடம் பிறந்த அன்று பூசைபார்க்க முடியாமல் காரைநகர் களபூமி மக்கள் பெரும் அவதி நிலைக்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

வாக்கிய பஞ்சாங்கப்படி கடந்தவெள்ளி இரவு9 27க்கு புதுவருடப்பிறந்ததையடுத்து ஆலயங்களுக்குசென்றகளபூமி மக்கள் குறிப்பிட்ட ஆலயங்களில் பூசை நடைபெறாலதை அடுத்து ஏமாற்றத்துடன் வீடு திருப்பினர்.

அடுத்த நாள் சனிக்கிழமை பூசைகள் இடம் பெற்றதாயினும் புதுவருடத்தன்று இடம் பெறாதது குறித்து அப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயம், திக்கரை முருகமூர்த்தி ஆலயம் உட்பட பத்திற்கும் மேற்பட்ட ஆலயங்கள் களபூமியில் இருந்தும் கூட இவ்வாறான நிலை ஏற்பட்டமைதுர் அதிர்ஷ்டமானது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

[க]

## கொழும்பில் இடம் பெறும் முக்கிய கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20ம் திகதி காலை 10.30 மணிக்கு பத்ரமுல்லவில் உள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தத்தம் பகுதிகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கைகளை அக் கூட்டத்தில்சமர்ப்பிக்க முடியும்.

அன்றைய தினம் ஆசிரியர்களுக்கான 'கற்றல்' சஞ்சிகையும் பணிப்பாளர்களிடம் வழங்கப்படவுள்ளது.

(க-15)

## மீண்டும் இயங்கும் திக்கம் வடிசாலை

[செம்பியன்பற்று]

மூடப்பட்டு இருந்த திக்கம் வடிசாலை கடந்த 10 ஆம் திகதி முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நடவடிக்கையினால் பலர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதுடன் பெருமளவு பதநீர் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வடிசாலையின் செயற்பாடு குன்றியமையை அடுத்து இங்கு கடமையாற்றிய ஊழியர் பலரின் வருமானம் பாதிப்படைந்தமையும் குறிப்பிடத்தக்கது. [க-42]

## கரப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு

[சுண்டுக்குளி]

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கரபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்டரீதியில் நடத்திவந்த கரபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 11 ஆம்திகதி கழகத் தலைவரின் தலைமையில் கழகவிளையாட்டுமைதானத்தில் நடை பெற்றது.

இறுதி ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய யாழ். பல்கலைக் கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் 25:23, 23:25, 25:18, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக ரி. கருணாகரன், ஏ. தேவன், ஆகியோர்கடமையாற்றினார்கள். (க-110)

# தபால் அலுவலகத்தில் குண்டு வெடிப்பு

(இலண்டன்)

இலண்டனில் உள்ள தபால் தரம்பிரிக்கும் அலுவலகம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு குண்டுவெடிப்பொன்று நிகழ்ந்துள்ளது.

ஐரிஸ் குடியரசு இராணுவத்திலிருந்து பிரிந்துசென்ற தீவிரவாதக் குழுவே இக்குண்டை வெடிக்கவைத்துள்ளதாக ஹொட்லானியா பயங்கரவாத எதிர்ப்புக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்த சமயம் ஊழியர்கள் எவரும் இல்லாததனால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை, ஆயினும் கட்டடமும் தளபாடங்களும் சேதமடைந்துள்ளன. (உ-2)

# லெபனான் பகுதிக்குள் இஸ்ரேலியவிமானம்தாக்கு

(பேரூட்)

லெபனானின் கிழக்குப் பகுதியில் உள்ள பேக்காப்பள்ளத்தாக்கில் இஸ்ரேலியவிமானங்கள் இரண்டு நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஈரான் மற்றும் சிரிய ஆதரவுடன் கூடிய கிஷ்புல்லா கெரில்லா இயக்கத்தினர் இஸ்ரேலிய வீரர் ஒருவரைக் கொலைசெய்தமைக்குபதிலடி கொடுக்கும் முகமாகவே இஸ்ரேலிய விமானங்கள் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

# உலகில் சமாதானம் ஏற்பட மனித குலம் பாடுபட வேண்டும்

## பாப்பரசர் அருளப்பர் வேண்டுகோள்

(வத்திக்கான்)

சமாதானத்தை ஏற்படுத்த மனித குலம் சகல வழிகளிலும் பாடுபட வேண்டும் என இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உலக மக்களிற்கு வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானில் இடம்பெற்ற பாஸ்க்காதின விழாவில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

81 வயதான அருளப்பர் சின்னப்பர் மேலும் தெரிவிக்கையில்;

மத்திய கிழக்கிலும் மற்றும் இலங்கையிலும் இனவெறி கொண்டு போராடும் நாடுகளிலும் சமாதானம் நிலை பெற வேண்டும். இதற்கு மனிதகுலம் வாய்ப்பளிக்கவேண்டு என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தமிழ்மொழி உட்பட 61 மொழிகளில் உரையாற்றிய பாப்பரசர் 6 வது மொழியாக தமிழில் உரையாற்றியுள்ளார்.

இப்பாஸ்காப் பண்டிகை விழாவின்போது உரோம் சென் பீற்றர் தேவாலய சதுக்கம், அனைத்து நாட்டு கொடிகளுடனும் மற்றும் நாட்டுசின்னங்கள் பொறிக்கப்பட்டமின்குமிழ்களுடனும்பிரமாண்டமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. (க-07)

உலக தரிசனம்

# ஜனநாயகவிரோதச் செயல்களில் காங்கிரஸ் கட்சி செயற்படுகிறது

## பிரதமர் வாஜ்பாய் காட்டமாக தெரிவிப்பு

[புதுடில்லி]

மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்காக ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில்காங்கிரஸ் கட்சி செயற்படுவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் குற்றம் சாட்டியுள்ளார்.

லக்னோவில் தேசிய விவசாய முன்னணிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கோஷங்கள் எழுப்பி வன்முறைகளைத் தூண்டும் வகையில் நடந்து பாராளுமன்றத்தைக் குலைக்கும் வகையில் நாட்டில் கிளர்ச்சிக்கு முற்பட்டால் நாட்டில் அராஜகம் தலை தூக்கும் என்று வாஜ்பாய் எச்சரித்தார்.

மேலும் அவர் தொடர்கையில்; அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு காங்கிரஸிற்கு அழைப்பு விடுத்திருந்தோம். சோனியா வரவில்லை சுப்பிரமணியம் சுவாமியின் சோனியா மீதான ஊழல் குற்றச்சாட்டே இதற்குக் காரணமாயிருக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சோனியா மீதுமத்தியபுலனாய்வுத்துறை விசாரணை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-து)

## புதுடில்லியில் இடம்பெற்ற

# காஷ்மீர் சமாதானப் பேச்சுக்கள் அனைத்து அமைப்புகளும் பங்கேற்பு

காஷ்மீர்ப் பகுதியில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் சமாதானப் பேச்சுக்கள் இந்தியத் தலைநகர் டில்லியில் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படிப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பு பிரதிநிதிகளுடன் முஸ்லிம் தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் காஷ்மீர் பிரதேச அரசியல் கட்சிகள் என்பவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, காஷ்மீரில் உள்ள பிரதான பிரிவினைவாதக் கூட்டணியான அனைத்துக் கட்சி, சூரியத் கட்சியினர் தாம் பாகிஸ்தானுக்குச் செல்ல அனுமதித்தால் அன்றி பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப் போவதில்லையென அறிக்கை விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## மருத்துவ உலகின் மாபெரும் சாதனை

# ரஷ்ய நாட்டு விஞ்ஞானிகளால் செயற்கை மூளை கண்டுபிடிப்பு

[மொஸ்கோ]

செயற்கை மென்பொருட்களாலும் இரசாயனக் கனிமங்களாலும் தயாரிக்கப்பட்ட செயற்கை மூளை ஒன்றினை ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

ரஷ்ய விஞ்ஞானிகளின் மேற்படி கண்டுபிடிப்பு வைத்திய உலகிற்கு கிடைத்த மாபெரும் வெற்றியென உலக விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இச்செயற்கை மூளை இயற்கை மூளையைப் போல செயற்படக் கூடியது எனவும் அனேக செயற்பாடுகளை புரியக்கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி செயற்கை மூளை பிழையான விதத்தில் செயற்பட்டால் அது மனிதனுக்கு பாரிய விளைவை ஏற்படுத்தலாம் எனவும் வைத்தியர்கள் அச்சம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

## கொங்கோவுக்கு

# அமைதிப்படை அனுப்ப கிளர்ச்சியாளர் தடை

[கின்ஸாஸா]

கொங்கோகுடியரசில்நடைபெற்று வரும் உள்நாட்டுக் குழப்பங்களை கட்டுப்படுத்துவதற்கு ஐ நா. அமைதிகாக்கும் படையினரை ஈடுபடுத்துவது என்ற அந்நாட்டு அரசின் முடிவுக்கு அங்குள்ள கிளர்ச்சிக்காரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஐ நா அமைப்பைச்சேர்ந்த 107 பேருடன் கொங்கோப் பகுதிக்கு விரைந்த விமானமொன்று கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கிஷாங்கா என்ற இடத்தில் தரையிறங்க முற்பட்டபோது கிளர்ச்சிக்காரரின்கடும்எதிர்ப்பினால் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே. [உ-9]

## பீஹார் மாநிலத்தில்

# வன்முறைகள் மத்தியில் பஞ்சாயத்துத் தேர்தல்

(பீஹார்)

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்று கிராமமட்ட தேர்தலின் போது, மூன்று தேர்தல் அதிகாரிகள் உட்பட 10 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பீஹார் மாநிலத்தில் 23 வருடங்களின் பின்னர் நடைபெறும் மேற்படித் தேர்தலில், ஐந்து வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற மோதல்களிலேயே இப்பத்துப் பேரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரேபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பெரும் தொகையான பொலிஸார் குவிக்கப்பட்ட போதும் கொலைகள் இடம் பெற்றுள்ளது. தேர்தல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே போட்டியிட இருந்த வேட்பாளர்களில் 40க்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இத் தேர்தலின் முதற்சுற்றின் போது 15 பேர் கொலை செய்யப்பட்டதாகச் செய்தி வெளியாகியமை தெரிந்ததே. [உ-9]

## செய்திப்பரல்

★ ரஷ்யத் தலைவ விளாடிமீர் புட்டின் முதல் முறையாகச் செச்னியாவிற்குச் சென்றுள்ளார்.

★ சீன விமானி கண்மூடித்தனமாக விமானததை ஓட்டியதால் அமெரிக்க விமானத்துடன் மோத நேர்ந்ததாம்.

★ சோனியா காந்தி இந்தியப் பிரஜை ஆவதற்கு முன் காப்புறுதி முகவராகக் கடமையாற்றினார் என்று சுப்பிரமணியசுவாமி கூறுகிறார். (து)

# கொலை வெறியர் துப்பாக்கிச் சூடு அப்பாவி மக்கள் 50 பேர் பலி

## தென் அமெரிக்காவில் கொடூரம்

(கொலம்பியா)

தென் அமெரிக்காவிலுள்ள கொலம்பியாவின் நகரம் ஒன்றில் இடதுசாரி கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய தாக்குதலில் ஐம்பது பேர் கொல்லப்பட்டனர்.

பாஸ் இயக்கத்தைச்சேர்ந்த கிளர்ச்சிக்காரர்கள் அந்த நகரை முற்றுக்கையிட்டு வீடுகளுக்குள் இருந்த அப்பாவி மக்களை வீதிக்கு இழுத்து வந்து சுட்டுக் கொன்று விட்டு தப்பி ஓடி விட்டார்களென்று உள்ளூர் வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்தவாரம் வலது சாரி இராணுவம் இதே பாணியில் கிராம மக்களைச் சுட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது. (து)

## ஒரு நாட் செலவு 25 இலட்ச ரூபா

(புதுடில்லி)

இந்தியாவின் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் நடைபெறுவதற்கு ஒரு நாளைக்கு சுமார் 25 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறதாக அந்நாட்டின் அரச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (உ-2)

## புத்தாண்டு இசைவிழாவில்

# குண்டுத் தாக்குதல்; சந்தேகத்தில் பாடசாலை மாணவன்கைது

(டாக்கா)

கடந்த சனியன்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற புத்தாண்டுதின இசைவிழா ஒன்றில் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக மாணவன் ஒருவரைப் பங்களாதேஷ் பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குண்டுத் தாக்குதல் ஈவிரக்கம் அற்ற செயல் என்று பிரிட்டன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கண்டித்துள்ளது.

எனினும் இக்குண்டுத்தாக்குதலை நடத்தியது தொடர்பாக இதுவரை எவரும்உரிமைகோர வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-து-9-)

கேட்டார்ப் பிணிக்குந்தகைய வாய்க்கோளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்

- குறள்

# வலம்புரி

## திருவிழாக் காலக் கடை!

இலங்கைத் தமிழர்கள் உரிமைகள் பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கு தமிழீழமே தீர்வாகுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை. கோபால சாமி விடுத்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். !

தமிழகத்தின் தலைவர்கள் தம் சுய நலத்தின் பேராலேயே இலங்கை வாழ் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பர். இது பழங்கதை. மேடையேறி மார்தட்டி பேச்சில் வீராப்பு வசனத்தைக் கேட்டே காது புளித்து விட்டது

ஒரு காலத்தில் இலங்கைத் தமிழர்கள் பேரினவாதத்தால் தாக்கப்படும் போதெல்லாம்,

எத்தனை நாள் உதவுவேன், உதவுவேன் எனக் கூறி ஏமாற்ற முடியும். உதவக் கூடிய காலமும் நேரமும்கடந்து பல வருடமாகி விட்டது. அது பற்றி வை. கோ. புரிந்து கொள்ளாது மீண்டும் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளார்.

உண்மையான விசுவாசத்துடன் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை வை. கோ. கையாண்டிருந்தால், அவர் தி. மு. க.வுடன் சேர்ந்திருந்த போது- பிரதமர் வாஜ்பாய்க்கு அருகில் இருந்து உரையாடிய போது, நம்மையும் சிந்தித்திருக்கலாம். அல்லது புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தாரென்ற பேரில் தமிழகத்திலிருந்து ஈழவேந்தனை கொழும்புக்கு நாடு கடத்தும் போது ஆகக் குறைந்தது தொலைபேசியிலாவது முதல்வர் கருணாநிதியுடன்தொடர்புகொண்டு ஈழவேந்தனை எங்கு அனுப்பினாலும் கொழும்புக்கு அனுப்பாதீர்கள் எனக்கேட்டிருக்கலாம்.

இவற்றையெல்லாம் கடத்தி விட்டு கலைஞருடன் உறவாடிய வை. கோவுக்கு இப்போதுகலைஞருடன் பகை, அதுமட்டுமன்றி தேர்தல் நெருங்குகிறது. எனவே திருவிழாக் காலத்தில் திடீரெனத் தோன்றும்கடைகள்போல் வை.கோவுக்கும் இருக்கிறதே.இலங்கைத் தமிழர் பிரச்சினை போட்டு விளாச வேண்டியது தானே. திருவிழா முடிந்தவுடன் கடையைப் பூட்டுவது போல் தேர்தல்முடிவடைந்ததும் வை. கோவும் நம் பிரச்சினையை மூடிவிடுவார். எல்லாம் சந்தர்ப்பவாதமே.

# மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் ஆபத்தானது

## மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது அவசியம்

'மூக்கும்முழியுமாஎன்னமா இருக்க' என்று அழகை வர்ணிப்பதுண்டு. முகத்தில்எடுப்பாகத் தெரியும் மூக்கின் அமைப்பு அழகை எடுத்துக் காட்டும்முக்கியஉறுப்பு.முகத்திற்கு வசீகரத்தை அளிப்பதோடு மட்டுமல்லாமல், உடலுக்குத் தேவையான உயிர் மூச்சான காற்றினை உடலுக்குள் செலுத்தும் ஒரு பாகம் மூக்கு. ஆதிகாலத்தில் உண்ணும் போது சுவாசிப்பதற்கும், சுவாசிக்கும் போதுஉண்பதற்கும் விலங்குகள் சிரமப்பட்டன. பின்னர் படிப்படியான பரிணாம வளர்ச்சியில், சுவாசப் பாதையும் உணவுப் பாதையும் தனித் தனியே பிரிந்தன. இதில் சுவாசிப்பதற்கான தனிப்பட்ட பாதையாக,மூக்கு நமக்குத் தெரியாமலேயே பல வேலைகளைச் செய்கிறது.

### வடிகட்டிச் சுத்தம் செய்தல்

அசுத்தங்களையும் வெவ்வேறு வெப்பதட்பநிலைகளில் விதவிதமான காற்றையும் நாம் சுவாசிக்க நேரிடுகிறது. அந்த வெளிக்காற்று அப்படியே உள்ளுக்குப் போனால் பல தீங்குகள் ஏற்படும். நம் உடல் நிலைக்கேற்ற நிலையான வெப்ப நிலைச்கு காற்றைக் குளிர்ச்சியாக்கி வடிகட்டி, சுத்தமாக்கப்பட்ட காற்று உள்ளேநுரையீரலைச் சென்றடைகிறது என்றால் அதற்குக் காரணம் மூக்குத்தான்; இவ்வாறுசெய்யா விட்டால் நுரையீரல் உலர்ந்து பாதிப்படைந்து விடும். மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் என்பது ஒரு ஆபத்தான அறிகுறி.

### இரத்தம் வடிதல்

மூக்கிலிருந்து இரத்தம் வடிவதைநிறுத்துவதற்குத்தேவையான முதலுதவிகளைச் செய்தால், உடலில் சுவாசச் சுற்று இயல்பான நிலையை அடையும். இதற்கான முதலுதவிகளைத் தெரிந்து கொள்வது நல்லது. பெரும்பாலான சிறு அளவிலான இரத்தம் வடிதலை, மூக்கினை அழுத்திப் பிடித்து விடுவதன் மூலமே நிறுத்தி விடமுடியும்.

இரண்டாவதாக, இரத்தம் வடிதலை நிறுத்தமூக்கின்மீது ஐஸ்கட்டிகளை வைக்கலாம். ஐஸ் கட்டியின் குளிர்ச்சியால் மூக்கின் இரத்த நாளங்கள் இறுக்கமடைகின்றன.

மூக்கிலிருந்து இரத்தம் வடியும் நபரை. படுக்க வைத்து ஓய்வு நிலையில் இருக்கச்செய்வது நல்லது. தலைக்குச் செல்லும் இரத்த அளவு குறைந்து மூக்கின் இரத்தப் போக்குநிற்கும். பொதுவாக இதற்குப் பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைகள்.

- ★ இரத்த உறைவைத்தூண்டும் மருந்துகள்.
- ★ இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகள்.
- ★ பதட்டத்தைக்குறைத்து, சீரான இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் மருந்துகள்.
- ★ நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகள்.
- ★ மூக்கின் அடைப்பை நீக்கும் மருந்துகள்.

இதுபோன்ற சிகிச்சைகள் மூக்கின் இரத்தப் போக்கை நிறுத்தா விட்டால், மூக்கினைப்பஞ்சுகொண்டு அடைத்தலின் மூலம், இரத்தம் வடியும் நாளத்தில் நேரடியாக அழுத்தத்தை உண்டாக்கி இரத்தக்கசிவைநிறுத்தலாம்.

அவற்றில் முக்கியமானவை.

- ★ மூக்கின் மேல் ஏற்படும் காயம்.
- ★ தலை மற்றும் முகத்தில் ஏற்படும் காயம்
- ★ மூக்குக் 'குத்தும் போது ஏற்படும் வெற்புறக்காயம்

தேவையற்ற அசுத்தங்கள் மூக்கில் தங்குவது. உயர் இரத்த அழுத்தம், இரத்தக் கசிவு ஏற்படும் உடல் வாகு. மூக்கின் உட்புறம் உண்டாகும் கட்டிகள், அதிப்பட்சமான தட்ப வெப்ப நிலை மற்றும் அழுத்தம், அறுவை சிகிச்சைக்கு பின் ஏற்படும் சில சிக்கல்கள்.

### மருந்துவ மனையில்

எனவே மூக்கிலிருந்து இரத்தம் கசிந்தால் அதனைக் கண்டு உணர்ச்சி வசப்படாமல், பாதிக்கப்பட்டவருக்குத் தைரியம் கொடுத்து தகுந்த மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெறுவது நல்லது. சிலர் கோப்பித்தூள், மரத்தூள், சாணி, மண் ஆகியவற்றை மூக்கினுள் திணித்து விடுவதால் நோயாளிக்கு ஏற்பு வலி போன்ற ஆபத்து ஏற்படவும், மூச்சுத் திணறல் ஏற்படவும் சாத்தியமுண்டு எனவே இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, முதலுதவியுடன் பாதிக்கபபட்ட நபரை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதே அறிவுடைமை

### தீவிர சிகிச்சை

மேலும் இரத்தக் கசிவுஎந்த இரத்தக் குழாயிலிருந்து ஏற்படுகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். பொதுவாக நெற்றிப் பகுதியிலுள்ள முன்புற எத்மாய்டு தமனி, கழுத்துப் புறப் பகுதியிலுள்ள கழுத்துத் தமனி ஆகியவற்றிலிருந்து இரத்தம் கசியலாம். இதுபோன்ற சமயங்களில்தீவிரமான சிகிச்சை தேவைப்படுகிறது. மூக்கிலிருந்துஇரத்தக் கசிவு அலலது இரத்தம்கெட்டக் காரணங்கள பலவுல

## மருத்துவ விளக்கம்

**டாக்டர் யு. சஞ்சய் MS (ENT)**

### உடற்பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப3 30 மணிககு பருததித்துறையில் உடற்பயிற்சி கருததரங்கு ஒன்று இடபெற்றது.

இக்கருத்தரங்கில், தமிழர் பாரம்பரிய மரபுவழி விளையாட்டான காலைகட்டை சுழற்றும் முறை அதனுடைய தசை நார்ககட்டின் செயற்பாட்டு முறை விளக்கம அதிபாரம் தூககலின் பழைய வரலாறு தற்காலச் செய்முறை விளககம செய்முறைப் பயிற்சி என்பவற்றை மே. தேவராஜன செய்து காண்பித்தார்.

மேற்படி பயிற்சி பற்றிய விளக்கங்களை செபா மகாதேவா, உடற்பயிற்சி விரிவுரையாளர் ஜி புலேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இரா. பஞ்சலிங்கம் நெறிப்படுத்திய இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருநதினர்களாக யாழ். பல்கலைககழக வர்த்தக முகாமைததுவ பீடாதிபதி மா. நடராஜசுந்தரம மற்றும் பலர் கலந்து கொண்டனர். (உ)

### விசேட அடையாள அட்டை

# விண்ணப்ப படிவத்துக்கு தட்டுப்பாடு நீக்க மாற்று நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் நிலவும் விசேட அடையாள அட்டை விண்ணப்பப்படிவத்திற்கான தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் புகைப்பட பிரதி அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்கவுள்ளதாக யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசேட அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்கள் அண்மையில் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், அவை குறைந்தளவே அனுப்பிவைக்கப்பட்டதாகவும்,

பாடசாலை ரீதியாக விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் தொகை அதிகரித்திருப்பதாலும் இவ் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாய் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவ் விண்ணப்பப்படிவத்திற்கான தட்டுப்பாடு நிலை குறித்து மேலிடத்துடன் தொடர்பு கொண்ட போதிலும், போக்குவரத்து காரணங்காட்டி தட்டிக்கழித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ-10)

## கைதடி கையிற்ற சிற்றி கந்தசுவாமி ஆலய பூஜைகள் மீண்டும் ஆரம்பம்

(மந்திகை)

கைதடி கையிற்றசிற்றி கந்த சுவாமி கோவில் பூஜைகள் கடந்த 14 ஆம் திகதி முதல் மீண்டும் அரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நீண்டகாலமாக பூஜைவழிபாடு எதுவுமின்றி பூட்டப்பட்டிருந்த இவ் ஆலயம் அப்பகுதியில் மக்கள் மீண்டும் குடியேறியதை அடுத்து பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன. (க-23)

## புதிதாக தொழில்கள் ஆரம்பிப்போர் உரிமங்களை தவறாது பெறவும்

### சுற்றாடல் அதிகார சபை தெரிவிப்பு

[கல்வயல்]

சூழலை மாசடையாது பாதுகாப்பதை முக்கியநோக்காகக் கொண்டு,

தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிப்போர் அதற்கான உரிமங்களை தம்மிடம் பெற்றுக் கொள்ளுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்கழி மாதம் வெளியிடப்பட்ட 1157/22ம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பின்வரும் தொழிற்சாலைகள் உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசோடாத் தொழிற்சாலை, அழுக்க கற்றிகள் தயாரிக்கும் 25 பேருக்கு மேல் பணிபுரியும் தொழிற்சாலை,அமிலம் தயாரித்தல், பொதி செய்தல், கிருமிநாசினி, எண்ணெய் சுத்திகரிப்பு, சாயம் தயாரிப்பு. தீக்குச்சி, உட்பட பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் உரிமம் பெற்றுக் கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-111)

## மின் விளக்குகள் நாசம் கோப்பாயில் சம்பவம்

(கோப்பாய்)

முக்கிய சந்தியில் பொருத்தப்பட்டிருந்த தெரு மின் விளக்குகளை விசமிகள் சிலர் கல்லால் எறிந்து உடைத்துள்ள சம்பவம் கோப்பாய் இராசவீதி இரண்டாம் கட்டைப் பகுதியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இப்பகுதியில் பல மரக்கறி பயிர்கள் பலன்தரத் தொடங்கியுள்ளமையால் இப்பகுதியில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபடும் வகையில் திட்டமிட்ட சிலர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது.

பொதுமக்களின் நன்மை கருதி மின்சார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையை துஷ்பிரயோகம் செய்வது வேதனைக்குரியதென தெரிவிக்கப்படுகிறது. (க-79)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1770)

# நாட்டில் நடக்கும் கொடியயுத்தம்
# பொருளாதாரத்தை சீரழிக்கிறது
## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற கொடிய யுத்தம் முடிவடைந்து சாந்தியும் சமாதானமும் ஏற்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதுவருட தினத்தன்று தனது தொகுதி மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்தை அழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தினால் அபிவிருத்தி திட்டங்கள் பாரதூரமாக பின்னடைந்துள்ள இந்நிலை பாரிய பெருளாதார சிக்கல்களை உருவாக்கி அபிவிருத்தியை பாதித்துள்ளது. ஆனால் தற்பொழுது அரசும் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்து போர் ஓய்ந்துள்ளமைநாட்டில் சுமுகநிலையை உருவாக்கி சமாதானம் மலரும் சமிக்ஞையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1769)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் எதிர்வரும் 19ந் திகதி கிரியைகள் இடம்பெற்று 20ந்திகதி வெள்ளிக்கிழமை காலை எட்டுமணிக்கு பாலஸ்தாபனம் இடம்பெறும். (இ)

சமூக சேவையாளர் 15பேருக்கு

## சமூகதிலகம்பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

[யாழ்ப்பாணம்]

புத்தாண்டையொட்டிகொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சமூகசேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுநடைபெற்றது.

மேற்படி சங்கத்தின் தலைவர் தனேந்திரன்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்அரசஅதிபர் க சண்முகநாதனால் பின்வருவோர்சமூகதிலகம் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அவர்களின் விபரம்வருமாறு.

பொன்னையா. சிறிராஜபுலேந்திரன், திருமதி. கனகசபை. கமலேஸ்வரி, இராஜேந்திரன். திருக்கருணை, பெருமாள்·செல்வராஜா இராமசாமி. செல்வவடிவேல் இராமசாமி. நாகேந்திரம் ஜெகதீசன். சுஜிந்திரன் தியாகராஜா. பாஸ்கரன் திருமதி. சந்திரன். ரீற்றா இளையதம்பி; சற்குருநாதன், நடராசா; தகுணதாஸ் தம்பிராசா. செந்தில்ராசா செல்லையா. ஞானச்சந்திரன் பொன். பழனிச்சாமி சின்னவி. அருமைத்துரை.

## டீசல் 35 ரூபா 85 சதம்
## ம.எண்ணெய்22ரூபா 45சதம்

எரிபொருள்களுக்கான விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் டீசல் 35 ரூபா 85 சதமாகவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 22ரூபா 45 சதமாகவும் எரிபொருள் நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை ஒயிலின்விலை லீற்றர் 1ரூபா 90 சதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அரசு அறிவித்திருந்த போதும் அதுசம்மந்தமாக வடபிராந்திய பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்திற்கு அறிவித்தல் எதுவும் கிடைக்காததால் எரிபொருள் நிலையங்களில் ஒயில்விற்பனை நிறுத்தப்பட்டிருந்தது. (வ)

### மகன் - - -

வீசியெறிந்தார்; இதன் போது கிரனேற் வெடித்ததில் 70வது வயதுடைய அவரது தந்தை துடிதுடித்துப் பலியானார். உறவினர்களில் பலர் காயமடைந்து கந்தளாய் ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப இராணுவ சிப்பாயை பொலிசார் கைதுசெய்து எதிர்வரும் 22ந் திகதிவரை விளக்க மறியலில் வைத்துள்ளனர். (இ)

### கடற்படையினரால்

சாயனப்பகுப்பாய்வு செய்யப்படவுள்ளதாகவும் இதற்கென இப் பரல்கள் கொழும்புக்கு எடுத்துவரப்பட்டுள்ளதுஎனக் குறிப்பிட்டார்.

இந்த மோதல் சம்பவத்தை அடுத்து குண்டு வீச்சு விமானங்கள் மோதல் நடைபெற்ற இடத்துக்கு விரைந்தபோதும் மோதல் தவிர்ப்பு அமுலில் இருந்த படியால் எத்தகைய தாக்குதல்களிலும் அவை ஈடுபடவில்லை எனவும், இம் மோதல் சம்பவம் தற்போதய தாக்குதல்தவிர்ப்பை பாதிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் விடுதலைப்புலிகள் தற்பாதுகாப்பிற்காக இத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ம]

### முல்லைத்தீவு

சம்பவத்தின் போது, விடுதலைப்புலிகளின் படகுகள் சேதமடைந்துள்ளதாகவும்; புலிகளின் தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடற்படையினரின் பீரங்கிப்படகுகள் புலிகளின் படகுகளைவழிமறித்து வலிந்த தாக்குதல்களைத் தொடுத்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அத்துமீறி புகுந்த கடற்படையினரே இத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சமாதான சூழ்நிலை ஏற்படுத்தும் வகையில் யுத்த நிறுத்த அறிவிப்பு கடந்த மூன்றுமாதகாலமாக இருந்த போதும் கடற் படையினர் வலிந்த தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்றும் புலிகளின குரல் வானொலி அறிவித்துள்ளது. (வ)

### நட்பை - - -

தடுத்து புத்திமதிகூறியதாயாரை பாடசாலையை மாற்றி தனது நட்பை கெடுத்தவர் என எண்ணி அடித்துக் கொலை செய்துள்ளான்.

தனது தாயாரை கொலை செய்து துயரம் தாங்காது மேற்படி சிறுவன் பொலிசாரிடம் தானாகவே சரணடைந்துள்ளான். [இ]

### தாக்குதல் - - -

தினம் மாலை6.30மணியளவில் விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து கொக்கட்டிச் சோலைமருதடிப் பிரதேசங்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கி பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன எனினும் இதனால் எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை புதுவருடதினமான சனிக்கிழமை மூதூர் சூடைக்குடா பகுதிநோக்கி கடற்படையினர் நடத்திய தாககுதலின்போது நான்கு மீன்பிடிவள்ளங்கள மற்றும் வீடுகள என்பன சேதமடைந்துளளதாகவும் இதனால் அப் பகுதியில் பதற்றம நிலவியதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந)

### அரச.--

காகப் போராடுவதிலும் பார்க்க சுயாட்சி அதிகாரமுள்ள தாயகத் தீர்வை ஏற்கத் தயாராக இருப்பதாக தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

சுயாட்சித் தீர்வுக்கு புலிகள் தயார் என்று கூறியிருப்பது புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடல்ல கடந்த ஆண்டு ஏப்ரலில் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது என்றும் சண்டேரைம்ஸ் நிருபர் தெரிவித்துள்ளார். [ம]

## யாழ். மாநகரசபையின்
## கு. ந. சேவையாளர்களுடன் விநாயக மூர்த்தி சந்திப்பு

யாழ்: மாநகரசபை ஆணையாளரால் வேலை நீக்கம் செய்யப்பட்ட மாநகரசபை சுகாதாரப்பகுதி குடும்பநல ஊழியர்களையும் மற்றும் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனையும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் யாழ்: மாவட்ட எம்.பி அ.விநாயகமூர்த்தி நேற்றுக் காலை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள பிலிப் நேர்சிங் கோமில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பையடுத்து யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியின் கட்டமைப்பை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வந்தபின்பே மேலதிக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வடக்குக் கிழக்கு மாகாணசபை ஆளுநர்மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவிடம் விநாயகமூர்த்தி எம்பி கோரியுள்ளார். (ம)

## மிதிவெடிகள் அகற்றும் வரை தென்மராட்சிக்குசெல்லாதீர்
## 512வதுபடையினர் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணி முடிவடையும் வரை அப்பகுதிக்கு பொதுமக்களைச் செல்ல வேண்டாமென 512ஆவது பாதுகாப்பு படைத்தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

தென்மராட்சிப் பகுதிக்குச் சென்ற பலர் மிதிவெடியினால் கால்களை இழந்துள்ளனர். எனவே அப்பகுதியில் மிதிவெடி அபாயம் அதிகமாகவுள்ளதால் அப்பகுதிக்கு செல்வதனைத் தவிர்க்குமாறு படைத்தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. [இ-05]

## மனிதஉரிமைகள்
## ஆணைக்குழு அதிகாரி தெல்லிப்பளைக்குவிஜயம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப் பளையிலுள்ள கைதிகள் புனர்வாழ்வு முகாமுக்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி எஸ் ஜீவேஸ்வரா கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்து அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டார்.

இப் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9கைதிகள் உட்பட மொத்தமாக 36 கைதிகள் உள்ளனர்.

இதேவேளை கடந்த 11ந் திகதியே பிந்துனுவெவ முகாமிலிருந்து 9கைதிகள் தெல்லிப்பளை புனர்வாழ்வுமுகாமுக்கு மாற்றப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-10]

### நாளையே வருவார்!

இன்று யாழ்ப்பாணம் வருகை தரவிருந்த சமாதானப் பேரவை உறுப்பினர்கள் நாளைய தினமே வருவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வருவதற்கான விமானப் பயணச் சீட்டு கிடைக்காமையே இத் தாமதத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சுற்றுப் போட்டிகளின் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 30ஆண்டுகள் நிறைவையும் நெற்கொழு விளையாட்டு மைதானத்தின் 50ஆண்டுகள பூர்த்தியையும்முன்னிட்டு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீககின் அனுசரணையுடன் நடாத்தப்படும் யாழ். மாவட்ட பாடசாலைகள், கழகங்களுக்கிடையிலான விலக்கல் முறையிலான மாபெரும் சுற்றுப்போட்டிகளின் திகதியை கால நீடிப்பு செய்தல்.

மேற்படி சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியில் கல்லூரிகள் விடுமுறையாக இருப்பதாலும், புதுவருடப்பிறப்பினை முன்னிட்டான பொது விடுமுறைகள் அமைந்தமையாலும் விண்ணப்பமுடிவுத் திகதியை16-05-2001ந் திகதி வரையில்மேலும் ஒரு மாத காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம். கே. சிவாஜிலிங்கம் ஜே. பி. யூ. எம்.
நகர முதல்வர்
நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்றப் பணிமனை
வல்வெட்டித்துறை.

(கி-1899)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது